முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், திருநெல்வேலி – 9.
ந.க.எண். 4783 / அ1 / 2018, நாள் – 05.04.2021

பொருள்: பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு இரா.சுப்பையாபிள்ளை என்பாரின் வாரிசுதாரர் திரு சு.பரமசிவன் என்பவருக்கு 14.11.1996 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – சார்பாக.

பார்வை :
1. சேரன்மகாதேவி, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.11546/அ5/1995, நாள்.08.11.1996.
2. சேரன்மகாதேவி, மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.3837/அ1/1999 நாள் 02.09.2002, 10.03.2004 மற்றும் 11.03.2006.
3. அரசாணை எண்.1(டி) 276, நாள் 23.07.2009.
4. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.டபிள்யு.பி.(எம்.டி) எண்.8592/2009 தீர்ப்பு நாள் 17.04.2018.
5. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அவமதிப்பு வழக்கு சி.பி.(எம்.டி) எண்.1351/2020.
6. அரசுக் கடித (1டி) எண்.58/ப.க. 3(2)/2021, நாள் 01.04.2021.
7. சென்னை, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண்.1411/ஜே/இ3/2018 நாள் 01.04.2021.
8. அரசாணை (நிலை) எண்.80/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016.
9. அரசாணை நிலை எண்.101, பள்ளிக் கல்வி (வரவு –செலவு திட்டம்–1)த்துறை நாள் 18.05.2018.

-----

பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கல்வி மாவட்டம், தோவாளை, அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 29.05.1979 அன்று காலமான திரு இரா.சுப்பையாபிள்ளை என்பவரின் வாரிசுதாரர் திரு சு.பரமசிவன் என்பவர் பார்வை–1ல் காணும் சேரன்மகாதேவி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக 14.11.1996 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில் இராதாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார்.

சார்ந்த பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் 14.11.1996 முற்பகல் பணிவரன்முறை செய்ய வேண்டி பார்வை 2ல் கண்டுள்ளவாறு அனுப்பப்பட்ட கருத்துரு பார்வை 3–ல் காணும் அரசாணையின்படி முறையற்ற திருமணம் வாயிலாக பிறந்த குழந்தைகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறத் தகுதியில்லாததால் இரண்டாம் மனைவியின் மகனான திரு.எஸ்.பரமசிவன் என்பவருக்கு வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணிநியமனம் முறையற்றது எனக் கருதி அவரை பணிநீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, சார்ந்த பணியாளர் பணிநீக்க அரசாணையை இரத்து செய்ய கோரி பார்வை 4–ல்

Scanned with CamScanner

கண்டுள்ளவாறு நீதிமன்ற வழக்கு (வழக்கு எண். WP(MD)No.8592/2009) தொடர்ந்து, அவ்வழக்கின் 17.04.2018 நாளிட்ட தீர்ப்பாணையில் கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

1. The Impugned order is quashed
2. The respondents are directed to regularize the appointment of the petitioner from the date, on which he was originally appointed
3. Consequently, the petitioner shall be entitled for service benefits, which are applicable to the petitioner under the relevant rules. Needful as indicated above shall be under taken within a period of twelve weeks from the date of receipt of a copy of this order.

மேற்கண்ட தீர்ப்பாணையினை செயல்படுத்தவில்லை என்பதால் பார்வை 5-ல் கண்டுள்ளவாறு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளில் சார்ந்த பணியாளரின் இளநிலை உதவியாளர் பணியினை பணிவரன்முறை செய்ய எந்தவித விதித்தளர்விற்கு அவசியம் எழாத நிலையில் மேற்காண் தீர்ப்பாணையின்படி சார்ந்த பணியாளரான திரு.சு.பரமசிவன் என்பவரின் பணியினை பார்வை 8-ல் காணும் அரசாணையின்படி, அன்னார் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 14.11.1996 முற்பகல் முதல் வரன்முறை செய்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை-8ல் காணும் அரசாணை பத்தி 6.1, 6.2ல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைந்து பணிவரன்முறை செய்திட ஏதுவாக கீழ்க்கண்டவாறு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பத்தி (6.1) | 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Order) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணிநியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது. |
| பத்தி (6.2) | மேலே பத்தி 6.1 ல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும். |

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்விற்கு அவசியம் எழாதநிலையில் பார்வை-6 மற்றும் 7-ல் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின்படியும், பார்வை 8-ல் காணும் அரசாணையின்படியும் தனியரின் பணியினை வரன்முறை செய்ய அனுமதியளித்துள்ளதன் அடிப்படையில், பார்வை 9-ல் காணும் அரசாணையில் வழங்கியுள்ள அதிகார பகிர்வின்படி திரு.சு.பரமசிவன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 14.11.1996 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

Scanned with CamScanner

## நிபந்தனைகள்

1. பள்ளிக்கல்வித்துறையில், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பணி நியமனமானது. 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்கு முறை 16(b)ன் படி தேர்வாணையத்தின் இசைவினைப் பெறுவது அவசியம் என்பதால், தனியருக்கு பணிவரன்முறை செய்து பிறப்பிக்கப்பட்ட இச்செயல்முறை ஆணையானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு, பள்ளிக்கல்வித்துறையால் எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாகும்.

2. தனியருக்கு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு நடைமுறையில் உள்ள சரிபார்ப்புப் பட்டியலின்படி கருத்துரு மற்றும் இந்த பணிவரன்முறை ஆணைநகல், பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை ஆணை பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட அலுவலர் இவ்வலுவலகத்துக்கு உடன் அனுப்பவேண்டும்.

4. பவானிசாகர் அடிப்படைப்பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படவேண்டும்.

5. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (மாவட்ட அலுவலக நடைமுறை நூல்) தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

6. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சார்ந்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இணைப்பு–பார்வை 6–ல் காண் அரசு கடித நகல் மற்றும்
பணிப்பதிவேடு (அசல்கள்)

முதன்மைக் கல்வி அலுவலர்
திருநெல்வேலி.

பெறுநர் :
1. சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்
1. பள்ளிக் கல்வி இணை இயக்குநருக்கு (பணியாளர் தொகுதி) பணிந்தனுப்பப்படுகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், கன்னியாகுமரி.
3. மாவட்டக் கல்வி அலுவலர், சேரன்மகாதேவி.
4. அரசு சிறப்பு வழக்கறிஞர் (கல்வி) , சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை.
5. அலுவலக கோப்பிற்கு.
6. உபரி நகல்

Scanned with CamScanner